www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

V11Eco

விருதுநகர் மாவட்டம்

முதல் திருப்புதல் தேர்வு - ஜனவரி 2025

வகுப்பு 11

காலம்: 3.00 மணி பொருளியல் மதிப்பெண்கள்: 90

பகுதி – I

20 x 1 = 20

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்கவும்.
ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்தெழுதவும்

1. பொருளாதாரத்தில் நாம் படிக்கும் அடிப்படை சிக்கல்
அ.எண்ணற்ற விருப்பங்கள் ஆ.அளவற்ற வளங்கள்
இ.பற்றாக்குறை ஈ.நம் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான உத்தி

2. நுண்ணியல் பொருளியல் எதை உள்ளடக்கியது?
அ.ஒட்டுமொத்த பொருளாதாரம்
ஆ.பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள்
இ.தனிநபர் பொருளாதார நடவடிக்கைகள்
ஈ.ஒட்டுமொத்த பொருளாதாரத் தொடர்பு

3. தனிக்கருத்திலிருந்து பொதுக்கருத்து பெறும் முறை
அ.பகுத்தாய்வு முறை ஆ.தொகுத்தாய்வு முறை
இ.இயல்புரை அறிவியல் ஈ.நெறியுறை அறிவியல்

4. கீழ்க்காணும் வாய்ப்பாட்டின் மூலம் இறுதி நிலை பயன்பாட்டை அளவிடலாம்
அ.TUn-TUn-1 ஆ.TUn-TUn+1 இ.TUn+TUn+1 ஈ.TUn-TUn+1

5. நுகர்வோர் எச்சம் என்ற கருத்துடன் தொடர்புடையவர்
அ.ஆடம் ஸ்மித் ஆ.ரிக்கார்டோ இ.மார்ஷல் ஈ.ராபின்ஸ்

6. கீழ்காணும் விதியை தேவை விதி அடிப்படையாகக் கொண்டுள்ளது.
அ.குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி ஆ.அளிப்பு விதி
இ.சம இறுதிநிலைப் பயன்பாட்டு விதி ஈ.காஸன் விதி

7. சராசரி உற்பத்தியைக் கணக்கிட பயன்படும் விகிதம்
அ.ΔTP/N ஆ.ΔTP/N இ.TP/MP ஈ.TP/N

8. தொழில் முனைவோரின் முக்கிய குணம் உறுதியற்ற தன்மையை பொருத்துக் கொள்ளல் என்ற கூற்றை கூறியவர் யார்?
அ.ஜே பி கிளார்க் ஆ.சும்பீட்டர் இ.நைட் ஈ.ஆடம் ஸ்மித்

9. நிறுவனத்தின் உள்ளிருந்து தோன்றும் சிக்கனத்திற்கு காரணமாக அமைவது எது?
அ.நிதி ஆ.தொழில்நுட்பம்
இ.மேலாண்மை ஈ.மேற்காணும் அனைத்தும்

10. நவீன பொருளியல் வல்லுனர்களின் விதி
அ.வளர்ந்து செல் விகித அளவு ஆ.குறைந்து செல் விகித அளவு
இ.மாறா விகித அளவு ஈ.மாறும் விகித அளவு

11. சராசரி உற்பத்தி குறையும் போது இறுதி நிலை உற்பத்தி
அ.சராசரி உற்பத்தியை விட அதிகமாக இருக்கும்
ஆ.சராசரி உற்பத்தியை விட குறைவாக இருக்கும்
இ.அதிகரிக்கும்
ஈ.அ மற்றும் இ

12. ஒரு அலகு உற்பத்திக்கான செலவு செலவாகும்.
அ.சராசரி ஆ.இறுதி நிலை இ.மாறும் ஈ.மொத்த

13. பொருட்களின் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் வருவாயாகும்.
அ.இலாபம் ஆ.மொத்த இ.சராசரி ஈ.இறுதிநிலை

14. நிறுவனத்தின் சமநிலை என்பது
அ.MC=MR ஆ.MC>MR இ.MC<MR ஈ.MR=Price

15. விலையின் மற்றொரு பெயர் அ.சராசரி வருவாய்
ஆ.இறுதிநிலை வருவாய் இ.மொத்த வருவாய் ஈ.சராசரி செலவு

16. விற்பனைச் செலவிற்கு உதாரணம்
அ.கச்சாப் பண்டம் விலை ஆ.போக்குவரத்துச் செலவு
இ.விளம்பர செலவு ஈ.கொள்முதல் செலவு

17. போலிவாரம் இதனால் தோன்றுகிறது.
அ.மனிதன் உருவாக்கிய கருவிகள் சாதனங்கள் ஆ.வீட்டில் தயார் செய்தவை
இ.இறக்குமதிப் பொருட்கள் ஈ.எதுவும் இல்லை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



18. 1956 ஆம் ஆண்டின் தொழில் கொள்கையின் நோக்கம்
    அ.பெரிய நிறுவனங்களை முன்னேற்றுவது
    ஆ.வேளாண் துறையை மட்டும் முன்னேற்றுவது
    இ.தனியார் துறையை மட்டும் முன்னேற்றுவது
    ஈ.குடிசைத் தொழில்களை மட்டும் முன்னேற்றுவது
19. 2016 ஆம் ஆண்டுக்கான மனித வளர்ச்சி அறிக்கையின்படி 188 நாடுகளின் இந்தியாவின் தரம்
    அ.130 ஆ.131 இ.135 ஈ.145
20. மக்கள் தொகை அடர்த்தி என்பது
    அ.நிலத்தின் அளவு/ மக்கள் தொகை ஆ.நிலத்தின் அளவு /வேலைவாய்ப்பு
    இ.மக்கள் தொகை /குறிப்பிட்ட நில அளவு ஈ.மக்கள் தொகை /வேலைவாய்ப்பு

## பகுதி – II

**குறிப்பு :** ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். **7 x 2 = 14**
**வினா எண் 30**க்கு கட்டாயமாக விடையளிக்கவும்

21. பண்டங்கள் என்றால் என்ன?
22. பண்டங்களை பணிகளில் இருந்து வேறுபடுத்துக.
23. நுகர்வோர் எச்சம் காணும் முறையை எழுதுக
24. நுகர்வோர் நடத்தையின் அடிப்படை அணுகுமுறைகளை குறிப்பிடுக.
25. விலையை ஏற்பவர் யார்?
26. சம உற்பத்தி செலவு கோடு என்றால் என்ன?
27. அளிப்புக்கோடு மேல் நோக்கி செல்வதன் காரணம் என்ன?
28. சுதந்திரம் அடைவதற்கு முன் இந்தியாவில் காணப்பட்ட பல்வேறு வகையான நில உடைமை முறைகள் யாவை?
29. நீர்மை விருப்பத்தின் பொருள் யாது?
30. குறைந்த தலா வருமானம் இருக்க காரணங்களாக ராவ் கூறுவதை பட்டியலிடுக

## பகுதி – III

**குறிப்பு :** ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். **7 x 3 = 21**
**வினா எண் 40**க்கு கட்டாயமாக விடையளிக்கவும்

31. பணிகளின் பல்வேறு இயல்புகள் யாவை?
32. நிறைவு போட்டி மற்றும் முற்றுரிமை அங்காடிகளில் உள்ளே நுழைதல் தன்மை யாது?
23. மாறாச் செலவை மாறும் செலவிலிருந்து வேறுபடுத்துக.
34. சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள் யாவை?
35. மனித விருப்பங்களின் இயல்பை கூறுக.
36. பணத் தேவைக்கான நோக்கங்கள் யாவை?
37. தொழில் முனைவோரின் பணிகள் யாவை?
38. ஆங்கிலேயர் காலத்தில் இந்தியக் கைவினைப் பொருட்கள் உற்பத்தி குறைந்தது ஏன்?
39. நிறுவனம் மற்றும் தொழிற்சாலைக்கு இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
40. பொருளாதார முன்னேற்றம் வரையறு

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும். 7 x 5 = 35**

41 அ. பொருளியலில் பகுத்தாய்வு மற்றும் தொகுத்தாய்வு முறைகளின் படிகளை விளக்குக அல்லது
    ஆ. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்திய பொருளாதாரம் பற்றி விவாதிக்க
42. அ. பொருளியலை பற்றிய பல்வேறு இலக்கணங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக
    அல்லது
    ஆ. ரிக்கார்டோவின் வாரக்கோட்பாட்டை எடுத்துக்காட்டுடன் விவரி
43. அ. தேவை நெகிழ்ச்சியை அளவிடும் முறைகள் யாவை? அல்லது
    ஆ. நிறைவு போட்டியில் எவ்வாறு விலை மற்றும் உற்பத்தி அளவு தீர்மானிக்கப்படுகிறது?
44. அ. மாறும் விகித விளைவு விதியை வரைபடத்துடன் விளக்குக. அல்லது
    ஆ. சம இறுதிநிலைப் பயன்பாட்டு விதியை விளக்குக
45. அ. கடன் நிதி வட்டிக்கோட்பாட்டை விளக்குக அல்லது
    ஆ. சம அளவு உற்பத்தி கோட்டின் பண்புகளை வரைபடத்துடன் விவரி
46. அ. இந்திய கனிம வளங்களின் முக்கியத்துவத்தை விவரி அல்லது
    ஆ. மொத்தச் செலவு=$10+Q^3$,Q=5 எனில் AC, AVC, TFC,TVC, AFC ஆகியவற்றை கண்டுபிடி
47. அ. முற்றுரிமை போட்டியில் விலை மற்றும் உற்பத்தி அளவை தீர்மானிப்பதை வரைபடத்துடன் விளக்குக அல்லது
    ஆ. காந்தியப் பொருளாதாரக் கருத்துக்களை சுருக்கமாக எழுதுக

- - - - -

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com